NEWS
2008
Ontario Budget
Growing a Stronger Ontario
Ontario
Ministry of Finance

## ஒன்ராறியோ வரவு செலவுத் திட்டம் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கென வினைத்திறன் பயிற்சியிலும் உட்கட்டமைப்பிலும் முதலீடு செய்கிறது

*சிறந்த வேலைகளுக்கும் வலுவான சமூகங்களுக்குமென அரசாங்கம் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது*

**செய்தி** மார்ச் 25, 2008

வரவு செலவுத் திட்டத்தை சமப்படுத்தி வர்த்தகப் போட்டித் திறனை மேம்படுத்தும் அதேவேளை, 2008 ஒன்ராறியோ வரவு செலவுத் திட்டம் வினைத்திறன் பயிற்சியிலும் உட்கட்டமைப்பிலும் பிரதான முதலீடுகளைச் செய்கின்றது.

**மேற்கோள்கள்**

“இந்த வரவு செலவுத் திட்டம் மக்கள் வேலைகளைப் பெறுவதையும் ஒன்ராறியோவின் பொருளாதாரம் வளர்வதையும் உறுதி செய்வது பற்றியதாகும்,” என நிதியமைச்சர் டுவைட் டங்கன் தெரிவித்தார்.

“ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வேலைகளில் சகலரும் வேலைசெய்யும் வகையிலும், சகல ஒன்ராறியோ வாசிகளும் வெற்றிபெறும் வகையிலும் வாய்ப்புக்களையும் வினைத்திறன்களையும் அவர்கள் பெற்றுக்கொள்வதை இந்த வரவு செலவுத் திட்டம் உறுதி செய்கின்றது”

“குறுகிய காலத்தில் வேலைகளை உருவாக்கக்கூடியதும் எமது பொருளாதாரத்தை நீண்ட காலத்துக்கு வலுப்படுத்தக்கூடியதுமான வீதிகள், பொதுப் போக்குவரத்து போன்ற உட்கட்டமைப்பில் இந்த வரவு செலவுத் திட்டம் முதலீடு செய்கின்றது”

**உடனடி உண்மைகள்**

- மூன்று வருட 1.5 பில்லியன் டொலர் Skills to Jobs Action Plan கூடுதலான ஒன்ராறியோ வாசிகளுக்கு நல்ல ஊதியம் உள்ள வேலைகளையும் புதிய வேலை வாய்ப்புக்களுக்கான நீண்டகாலப் பயிற்சிகளையும் பெற்றுக் கொடுக்கும்.
    - பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் பகுதிகளில் புதிய தொழில்களுக்கும் நல்ல ஊதியம் தரும் வேலைகளுக்கும் 20,000 வேலையற்றிருப்போரை மாறிக்கொள்ள உதவக்கூடிய ஒரு Second Career Strategy க்கு மூன்று வருடங்களில் 355 மில்லியன் டொலர்.
        - உதாரணமாக வினைத்திறன் மிக்க தொழில் ஒன்றுக்கு மாறவும் ஒரு நாலு தவணை, இரண்டு வருட இயந்திரவியல் தொழில் நுட்பப் பாடத் திட்டம் ஒன்றைக் கல்லூரி ஒன்றில் கற்கவும் விரும்பும் ஓர் உற்பத்தித்துறைத் தொழிலாளிக்கு வேண்டிய படிப்புச் செலவுக்கும் வாழ்க்கைப் படிக்கும் என Second Career Strategy 25,000 டொலரை வழங்குகிறது.
    - தொழிலின் போதான பயிற்சியை விரிவாக்குவதற்கு அடுத்துவரும் மூன்று வருடங்களில் 75 மில்லியன் டொலர்
    - பல்கலைக் கழக மாணவருக்கான உதவியை மேம்படுத்தி, மூலதன விரிவாக்கத்திலும் புதுப்பித்தலிலும் முதலிடுகின்றது.

- பின்வருவனவற்றை உள்ளடக்கும், புதிய உள்ளூராட்சி உட்கட்டமைப்பில், 2007-08களில் 1 பில்லியன் டொலர்:
    - ஒன்ராறியோ பெரும்பாகத்திலும் ஹமில்ரனிலும் பொதுப் போக்குவரத்துக்கென 497 மில்லியன் டொலர்
    - ரொறொன்ரோவுக்கு வெளியான சமூகங்களில் வீதிகளுக்கும் பாலங்களுக்கும் என 400 மில்லியன் டொலர்
    - சக்தித்திறன் முன்னேற்றம் உட்பட, சமூகவுதவி வீட்டு அலகுகளைப் புனருத்தாரணம் செய்வதற்கு 100 மில்லியன் டொலர்.

- பின்வருவனவற்றை உள்ளடக்கும், பிரேரிக்கப்பட புதிய வர்த்தகவரி நிவாரணத்திற்கு நான்கு வருடங்களில் 750 மில்லியன் டொலர்:
    - மீள்கொடுப்பனவில் 190 மில்லியன் டொலருக்கு உரிமையளிக்கக்கூடிய உற்பத்தி மற்றும் நிறுவனங்களுக்கான மூலதன வரியை 2007, ஜனவரி 1இல் இருந்து அகற்றுதல்
    - தகுதி பெறும் கனேடிய பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் அல்லது ஆய்வு நிலையங்களால் உருவாக்கப்படும் அறிவுசார் சொத்துக்களை வர்த்தகமயப்படுத்தும் புதிய கூட்டுத்தாபனங்களுக்கு ஒரு 10 வருட ஒன்ராறியோ வருமானவரி விலக்கு
    - உற்பத்தி, செயல்முறை இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்கென 2012க்கு முன்னர் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு ஒரு துரிதப்படுத்தப்பட்ட Capital Cost Allowance இன் வீதம் நீடிக்கப்படல்
    - அடுத்த மூன்று வருடங்களில் 70 மில்லியன் டொலருக்கும் அதிகமான சேமிப்பை ஏற்படுத்தும் வகையில், வடபிரதேச வர்த்தகங்களுக்கான, வர்த்தகக் கல்வி வரியை (Business Education Tax - BET) துரிதப்படுத்தல்

- குறைந்த, நடுத்தர வருமானங்களுடன் வீட்டுச் சொந்தக்காரராக இருக்கும் முதியோருக்கு, ஒரு பிரேரிக்கப்பட்ட புதிய சொத்துவரி அரச கொடுப்பனவாக ஐந்து வருடங்களில் 1 பில்லியன் டொலரை இந்த வரவு செலவுத் திட்டம் பிரேரிக்கின்றது.

- மக்கின்ரி அரசாங்கத்தின் வறுமை உபாயத்தின் மீதான விரைவான நடவடிக்கை:
    - குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு மேலும் சிறந்த பல் பராமரிப்பை வழங்குவதற்கென மூன்று வருடங்களுக்கு 135 மில்லியன் டொலர்
    - மாணவர் சத்துணவுத் திட்டத்திற்கான நிதியளிப்பை இருமடங்காக்குவதற்கென மூன்று வருடங்களில் 32 மில்லியன் டொலர்
    - 2008-09இல் சமூக உதவிக் கொடுப்பனவுகளில் இரண்டு சதவீத அதிகரிப்பு

- பின்வருவனவற்றை உள்ளடக்கும், சுகாதாரத்துறைச் செலவினங்களில் 2008-09இல் 40.4 பில்லியன் டொலர். இது ஒரு ஆறு சதவீத அதிகரிப்:
    - ஏனைய முதலீடுகளுடன், 2011-12 அளவில் 9,000 தாதியரை வேலைக்கு அமர்த்துவதை நோக்கி, மூன்று வருடங்களில் 500 மில்லியன் டொலர்
    - அவசர சேவைப் பிரிவில் காத்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்கும் நோயாளர் திருப்தியை முன்னேற்றுவதற்கும் மருத்துவ மனைகளுக்கு மூன்று வருடங்களில் 180 மில்லியன் டொலர்
    - குடும்ப ஆரோக்கியக் குழுக்களை மேலும் அதிகரிக்கவென அடுத்த மூன்று வருடங்களில் 53 மில்லியன் டொலர்
    - அடுத்துவரும் மூன்று வருடங்களில் மேலும் அதிக தாதியரின் கீழ் இயங்கும் சிகிச்சை நிலையங்களை அதிகரித்துக்கொள்வதற்கென 38 மில்லியன் டொலர்
    - மருத்துவிச்சியர் மற்றும் தாதியர் நியமன வாய்ப்புக்களை அதிகரித்தல்

- 2008-09 பாடசாலை வருடத்தில் Grants for Student Needs ஊடாக, கல்வியறிவு மற்றும் கணக்கறிவை முன்னேற்றவும், பட்டம் பெறும் வீதத்தை அதிகரிக்கவும், வகுப்பு எண்ணிக்கையைக் குறைக்கவும் எனக் கல்விச் செலவினங்களை 18.8 பில்லியன் டொலராக அதிகரித்தல்.

- மக்கின்ரி அரசாங்கம் பல்கலைக் கழக மாணவர்களது கல்விச் செலவுக்கு உதவுகின்றது. பிரேரிக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:
    - ஒவ்வொரு முழுநேரப் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி மாணவருக்கும் உதவக்கூடிய ஒரு வருடாந்த பாடப் புத்தக மற்றும் தொழில் நுட்பக் கொடுப்பனவுக்கென மூன்று வருடங்களில் 385 மில்லியன் டொலர்
    - கிராமிய மற்றும் தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து வரும் மணவர்களுக்கு உதவி செய்ய ஒரு Distance Grant க்கு மூன்று வருடங்களில் 27 மில்லியன் டொலர்.

- புதுப்பிக்கக்கூடிய சக்தி மற்றும் பாதுகாப்பு, பொதுப் போக்குவரத்து மற்றும் ENERGY STAR® வீட்டு மின்சாதனங்கள் மற்றும் மின் குமிழ்கள் மீதான சில்லறை விற்பனை வரி விலக்குக்கான பிரேரிக்கப்பட்ட நீடிப்பு என்பவற்றில் முதலீடு செய்வதன் மூலம் மக்கின்ரி அரசாங்கம் சூழல் மாற்றத்துக்கு எதிராகப் போராடுகின்றது.

- இந்த வரவு செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்புகள் இல்லை. மக்கின்ரி அரசாங்கம் 2005-06 மற்றும் 2010-11 ஆண்டுகளுக்கிடையில் தனது மூன்றாவது அடுத்தடுத்த மிகையானதும், அடுத்தடுத்த ஆறாவது சமநிலைப்படுத்தப்பட்டதுமான வரவு செலவுத் திட்டத்தை எய்துவதற்கான சரியான பாதையில் உள்ளது

**மேலும் படித்தறியுங்கள்**

அமைச்சர் டங்கன் வரவு செலவுத் திட்ட உரை வழங்குவதை வீடியோவில் பாருங்கள் அல்லது அதனை முழுமையாக வாசியுங்கள்.

வரவு செலவுத் திட்ட முன்னெடுப்புகள் பற்றிய பின்னணித் தகவல்களை வாசியுங்கள்:

- வினைத் திறன்களில் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- ஆரோக்கிய பராமரிப்பில் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் எதிர்காலத்தை வலுப்படுத்தல்
- கல்வியில் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- வடபிரதேச மற்றம் கிராமிய ஒன்ராறியோவில் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- குடும்பங்களிலும் வாழ்க்கைத் தரத்திலும் முதலீடு செய்வதன் மூலம் ஒன்ராறியோவின் எதிர்காலத்தை வலுப்படுத்தல்
- ஒரு செழிப்பான எதிர்காலத்தை அடைய ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்

வரவு செலவுத் திட்டத்தின் மின்வடிவத்தை தரவிறக்கம் செய்யுங்கள்.

வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை வாசிக்க 16 மொழிகளிலிருந்து தெரிவு செய்யுங்கள்



ஊடாக விசாரணைகள்
Steve Erwin, Minister's Office, 416 325-3645
Scott Blodgett, Ministry of Finance, 416 325-0324
பொது விசாரணைகள்
1-800-337-7222

**ontario.ca/finance-news**

நிதியமைச்சு செய்தியூட்டு க்கு சந்தா செலுத்தி, மிகப் பிந்திய செய்திகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்
அல்லது மின்னஞ்சல் எச்சரிக்கை

Tamil